
திறவுகோல்
2057
கார்த்திகை
மாத இதழ்
வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள்
அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# விண்ணை ஆண்ட விரலின் நிறம் கறுப்பு...

## (கேத்தரின் ஜான்சன்)

**நிற இருளிலிருந்து - நீல விண்மீன்கள்...**
**ஒரு நெடும் பயணம்**

நட்சத்திரங்களை எண்ணும் விரல்கள்,
சிலவேளை

ராக்கெட்டுகளையும் திசை திருப்பும்;

வானம் எல்லோருக்கும் பொதுவானது
என்றுதான் நினைக்கிறோம்.
அந்த வானத்தை நோக்கி விரலை நீட்ட...
அந்த வானத்தின் பாதையை கணக்கிட...
ஒரு காலத்தில், நிறமும் பாலினமும்
தடையாக நின்றன.

அந்தத் தடைகளை உடைத்து நொறுக்கி,
எண்களை எரிபொருளாக்கி,
அமெரிக்காவின் விண்வெளி
வரலாற்றையே திசை திருப்பிய ஒரு
கறுப்புப் பெண்ணின் பெயர்தான் -
கேத்தரின் ஜான்சன்.

**நிறம் போட்டது தடை -**
**அறிவு சொன்னது "அதை உடை"...**

அவள் ஒரு கணிதவியலாளர் மட்டுமல்ல;
அவள் ஒரு கறுப்பு நெருப்பு . அவள்
காகிதத்தில் எழுதிய ஒவ்வொரு
எண்ணும் ஒரு போராட்டப்
பிரகடனமாக இருந்தது.

அவளது மூளை நாசாவின் மிக




முக்கியமான கணக்குகளுக்கு விடை
கண்டது. ஆனால் அவளுக்கோ
அந்நாட்டு நிறவெறி, தடை என்றது -
வெள்ளையர் மட்டும் உட்காரும்
மேசைகளில்!

அவளது கணித அறிவு ஆராய்ச்சிக்கு
நெருக்கமாய் பயன்படுத்தப்பட்டது.
ஆனால் அவள் கழிப்பறைக்கு ஒவ்வொரு
முறையும் விரட்டப்பட்டாள் - 800
மீட்டர் தூரம்.

இது தோலின் நிறத்தால் தடுக்கப்பட்டு,
அறிவின் திறத்தால் தகர்க்கப்பட்ட
தடையின் கதை... ஒரு கறுப்புப்
பெண்ணின் விண்வெளி சாகச காவியம்.

**இடப்பெயர்வு - அவளுக்கு ஓர் ஏவுதளம்...**

1918ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் தேதி...
நிலவு உற்றுப் பார்த்தது மேற்கு
வர்ஜீனியா மாநிலத்தின் வொயிட் சல்பர்
ஸ்பிரிங்ஸ் கிராமத்தை...! அங்குதான்
வான்வெளிப் பாதையின் இரகசிய
சூத்திரம் கறுப்புக் குழந்தையாய்
பிறந்திருந்தது.

ஜோஷ்வா உழவர், தச்சர், மற்றும்
ஓட்டலில் வேலை செய்பவர்) - மற்றும்
ஜாய்லெட். (ஆசிரியை) தம்பதியருக்கு

நான்காவது குழந்தையாக ஒரு கணக்கே வந்து உதித்தது.

சிறுவயதிலேயே அவளுக்கு எண்கள் மீது எப்போதும் கண்கள்.

'நான் எல்லாவற்றையும் எண்ணினேன். வீட்டிலிருந்து சாலைக்கு உள்ள படிகளை, தேவாலயத்துக்குச் செல்லும் படிகளை, நான் கழுவிய தட்டுகளையும் கரண்டிகளையும் - எண்ண முடிந்த எதையும் நான் எண்ணிக் கொண்டேயிருந்தேன்'

உலகம் அவளுக்கு ஒரு கணிதப் புத்தகமாக விரிந்தது. அது வெறும் விளையாட்டு அல்ல; அது ஒரு மேதையின் மூளை, தன்னைத்தானே பயிற்றுவித்துக் கொண்ட முறை.

அந்தக் காலத்தில், மேற்கு வர்ஜீனியாவில் கருப்பின மாணவர்களின் கல்விக்கு, இடப்பட்டிருந்தது ஒரு கம்பி வேலி! எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க, அவர்கள் வசித்த மாவட்டத்தில், பள்ளிகளின் கதவுகள் அடைக்கப்பட்டன. அந்த இனவெறி வேலியை அறுத்தெறிய, ஜோஷுவா தன் நிலத்தை விற்று , தன் குடும்பத்தோடு 120 மைல் தொலைவில் உள்ள இன்ஸ்டிடியூட் நகருக்கு புலம் பெயர்ந்தார்.

ஒரு பெண் குழந்தை கல்வி கற்பதற்காக... தந்தையின் அந்த இடப்பெயர்வு வெறும் இடப்பெயர்வல்ல, அதுதான் கேத்தரின் ஜான்சனின் வாழ்க்கை இராக்கெட்டின் முதல் ஏவுதளமாக அமைந்தது. கல்வி மறுக்கப்பட்ட மண்ணில் பிறந்தவள், கல்விக்காக மலைகளைக் கடந்தாள்.

"கனவு காண்பது தவறல்ல; என் கனவை நனவாக்கும் என் வேகத்தை யாராலும் தடுக்க முடியாது." -கேத்தரின் ஜான்சன்.

**கலைந்து போன அவள் கணக்கு**

கேத்தரின் ஜான்சனின் அறிவு ஒரு கற்பூரத் தீ. பள்ளியில் அவள் வகுப்புகளை மடங்குகளாய்த் தாண்டினாள். பத்து வயதில் உயர்நிலைப் பள்ளி... பதினைந்து வயதில் வெஸ்ட் வர்ஜீனியா ஸ்டேட் கல்லூரி...

கல்லூரியில் அவளது கணித ஆற்றல் அதிரச் செய்தது பேராசிரியர் டாக்டர் டபிள்யூ. டபிள்யூ. ஷீஃபெலின் கிளேட்டர் என்பவரை! அவர்தான் அமெரிக்காவின் மூன்றாவது கறுப்பின கணிதவியல் முனைவர் பட்டதாரி . அவருக்கே அவள் அறிவுப் பசிக்கு ஏற்ற தீனி போட, புதிய பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டியிருந்தது. அவர் கற்பித்த 'அனாலிட்டிக் ஜியாமெட்ரி ஆஃப் ஸ்பேஸ்' அவளைப் பயணிக்க வைத்தது வானவியல் நோக்கி!. பதினெட்டு வயதில், கணிதத்திலும் பிரெஞ்சு மொழியிலும் இரட்டைப் பட்டம் ஏந்தினாள் - உயர் மதிப்பெண்களுடன்.

'நான் கணிதத்தைக் கற்றுக் கொள்வதை விரும்புகிறேன். அது எனக்கு ஒரு கலையும் அறிவியலுமாக விரிகிறது... ஈர்க்கிறது'

என்று அவள் பின்னாளில் கூறினாள். அந்தக் கணித ஈர்ப்பு விசையே அவளது

வாழ்நாள் முழுவதும் அவளை இயக்கிய சக்தி .

ஆனால் 1930களின் அமெரிக்காவில், கருப்பினத்தைச் சேர்ந்த ஒரு பெண்கணிதவியலாளருக்கு, வேலைவாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன. அவள் ஆசிரியையாக வேலையைத் தொடங்கினாள். ஜேம்ஸ் கோபிள் என்பவரை மணந்தாள். மூன்று மகள்களுக்குத் தாயானாள். கணவன் ஜேம்ஸ் கோபிள் புற்றுநோயால் இறந்தபோது துயரம் அவள் வாழ்க்கைக் கணக்குகளை கலைத்துப் போட்டது. ஆனால் எண்கள் அவளைத் தூக்கிப் பிடித்தன.

**ஒற்றைக் கேள்வி - ஒரு தேசத்தின் அவமானம்...**

1953ஆம் ஆண்டு, கேத்தரின் ஜான்சன் ,நேஷனல் அட்வைசரி கமிட்டி ஃபார் ஏரோநாட்டிக்ஸ் (NACA) - பின்னாளில் நாசா என்று அழைக்கப்பட்டது - என்னும் நிறுவனத்தின் லாங்லி ஆராய்ச்சி மையத்தில் அடியெடுத்து வைத்தாள்.

அங்கு அவள் பணியில் சேர்ந்தது 'மேற்குப் பகுதி கணிதப் பிரிவு' (West Area Computing). அது கருப்பின பெண்களுக்கென தனியே பிரிக்கப்பட்ட அலுவல் அறை... இனவெறிச் சிறை ! அங்கு கருப்பினப் பெண்கள் "கணிப்பாளர்கள்" (Computers) என்று பணியமர்த்தப்பட்டு, கையால் கணக்கிடும் இயந்திரங்களாக அவர்கள் வேலை வாங்கப்பட்டனர்.

தனி கழிப்பறை, தனி காபி பாத்திரம், 'கலர்டு கம்ப்யூட்டர்ஸ்' (கறுப்பின கணிப்பாளர்கள்) என்று எழுதப்பட்ட தனி மேசை - இவை அன்றாட அவமான அடையாளங்களாக அவளை உறுத்தின.

இன்று எப்படி ஆபத்தான வாயுக்கள் வார்த்தை ஒப்பனை செய்யப்பட்டு பசுமை வாயுக்கள் என்று ஏமாற்றப்படுகிறதோ, அதைப் போலத்தான் அன்று கறுப்பினத்தவர் பெயர் "திருமுழுக்கு" செய்யப்பட்டு வண்ணத்தோர் என்று அழைக்கப்பட்டனர்.

கறுப்பின தொழிலாளர்களின் கழிப்பறைகள் ஒதுக்கப்பட்டு... கட்டிடத்தின் மறுமுனையில்... 800 மீட்டர் தூரத்தில்...!

மழையிலும், வெயிலிலும், பனிக்காலத்து உறைபனியிலும் அவள் அந்த இன ஒதுக்கல் தூரத்தை இயற்கை அழைப்பின் ஒவ்வொரு வேளையும் தாண்ட வேண்டி இருந்தது. அலுவலகத்திலிருந்து இறங்கி, படிக்கட்டுகள் தாண்டி , திறந்தவெளி கடந்து, அடுத்த கட்டிடத்தை அடைந்து, அங்குள்ள "வண்ணத்தோர்" (Coloured) என்று எழுதப்பட்ட கழிப்பறையை அடைவதற்குள், அந்தப் பெண் படபடப்பில் நேரத்தையும் உடல் வலிமையையும் இழந்தாள்... கண்ணீரில் நனைந்தாள்.

இந்த விரட்டலை (repulsive force) நியாயப்படுத்தும் இயற்பியல் விதியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்? வெறும் தோல் நிறம் ஒன்றே இந்த 800 மீ தூரத்தைத் தூக்கிப் பிடித்தது.

"நான் அந்தப் புறமுதுகிட்ட 800 மீ. தூரத்தை ஒவ்வொரு முறை கடந்தபோதும் என் காலடிகள் கதறிய வார்த்தைகள்:-

"ஏன்... ஏன் என் மூளைக்கு இல்லாத எல்லை... என் கால்களுக்கு மட்டும்?"

இந்த ஒற்றைக் கேள்வியில் , ஒரு தேசத்தின் முழு அவமானமும் அடங்கியிருந்தது.

**சிங்கம் சிலிர்த்தது;**
**சிறு நரிகள் ஒதுங்கின...**

ஆனாலும் அவள் அமைதியாக இல்லை... ஒருநாள் தகர்த்தெறிந்தாள் அந்தப் பிரிவினைக் கழிப்பறை நடைமுறையையே! தன் அலுவல் அறைக்கு அருகிலிருந்த "வெள்ளையர் மட்டும்" கழிப்பறைக்குள் புயலாய் நுழைந்தாள்; பயன்படுத்தினாள்; திரும்பினாள். யாராலும் அவளைத் தடுக்க முடியவில்லை. வியர்க்க மட்டுமே முடிந்தது வெள்ளையரால்!

வெட்டினால்தான் வாள்; கொட்டினால்தான் தேள்; கரை உடைத்தால்தான் காட்டாறு; அலை வெகுண்டு நகர் உடைத்தால்தான் சுனாமி. இல்லையேல் இவற்றின் வீரியம் விமர்சனத்திற்கு உள்ளாகும். மதிப்பு காலால் மிதிக்கப்படும். அதனால்தான் இச்செயலால் மீட்டெடுத்தாள் கேத்தரீன் கறுப்பின திண்மையை!

அப்போது அவளது கண்களில் இருந்த அறச்சீற்றமும் உறுதியும், எந்த தடுப்புப் பலகையையும் தகர்த்தெறியும் வலிமை மிக்கது.

"வெள்ளையர் மட்டும்" கழிப்பறை நோக்கிய அன்றைய அவள் நடை அயர்ச்சி நடையல்ல; இனவெறியின் தலையை நசுக்கி அதன்மேல் நடந்த வெற்றிநடை. காளிங்க நர்த்தனம்... ஒவ்வொரு காலடியும் ஒரு ஊர்த்துவ தாண்டவம்...!

அத்துடன் ஆராய்ச்சி ஆலோசனைக் கூட்டங்களில், ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட அந்நாளில், அவள் நுழைந்தாள்.... கேள்விகள் கேட்டாள்,

'ஏன் நான் இங்கு இருக்கக் கூடாது? கணக்குகள் தவறாக இருந்தால் திருத்துபவள் நான்தானே" சொல்லால் அறைந்தாள்... அடைத்த கதவுகளைத் திறந்தாள்.

'எனக்கு தாழ்வு மனப்பான்மை இருந்ததே இல்லை. ஒருபோதும் இல்லை. நான் யாரையும் விட குறைவானவள் இல்லை, ஆனால் யாரையும் விட மேலானவளும் இல்லை'

அவள் தன் திறமையை நிரூபிக்க யாரிடமும் அனுமதி கேட்கவில்லை; காற்றுக்கு யார் அனுமதி வேண்டும் வீச! எண்கள் பேசின அவளுக்காக!

விமான விபத்துக் குழுக்களின் அறிக்கைகளை , பகுப்பாய்வு செய்யும் , 'ஏரோடைனமிக்ஸ்' பிரிவின் ஆய்வுக் கூட்டங்களில் அவள் தானாகவே சென்றாள். கேள்விகளை எழுப்பினாள், எவரும் மறுக்க முடியாத கணிதத் தர்க்கத்துடன் அவளே விடையும்

சொன்னாள், தன் இடத்தைத் தன் திறமையால் தானே உறுதிப்படுத்திக் கொண்டாள்.

சிங்கம் சிலிர்த்ததும் சிறு நரிகள் ஒதுங்கி மறைந்தன.

**நம் வானமே இனி நம்முடையது இல்லையா?**

1957ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், நான்காம் நாள். அமெரிக்கா தூங்கிக் கொண்டிருந்த ஓர் இரவில் சோவியத் யூனியனின் வானில, ஒரு சிறு உலோகப் பந்து கிளம்பியது - ஸ்புட்னிக் 1.

மனிதன், விண்வெளியில் அனுப்பிய முதல் செயற்கைக்கோள். அது வெறும் விஞ்ஞானச் சாதனை அல்ல; அது பனிப்போரின் நடுவே அமெரிக்காவின் ஆதிக்கப் பெருமையின் மீது விழுந்த பேரிடி. 'ஸ்புட்னிக் அதிர்ச்சி' என்று வரலாறு உரக்க அழைத்தது. அது பீதியில் ஆழ்த்தியது அமெரிக்க அரசியல் தலைமையை!

கம்யூனிசமும் முதலாளித்துவமும் மோதிக் கொண்டிருந்த அன்றைய உலக அரங்கில், விண்வெளி என்பது அவர்களின் விளையாட்டுக் களம். அது ராணுவ பலத்தின், தொழில்நுட்ப மேலாதிக்கத்தின், சித்தாந்த வெற்றியின் அடையாளக் கொடிக்கம்பம் .

"நம் வானமே இனி நம்முடையது இல்லையா?" அச்சத்துடன் கேட்டுக் கொண்டார்களாம் அமெரிக்க மக்கள் ஸ்புட்னிக் அதிர்ச்சியில்!

இதுவரை வெள்ளையின மேலாண்மை என்னும் மயக்கத்தில் மிதந்து கொண்டிருந்த ஒரு தேசம், திடீரென்று ஓர் உண்மையை உணர்ந்தது.

திறமையை நிறத்தால் அளந்தால் நாடே தோற்றுப் போகும்.

**விரியத் திறந்தது வேற்றுமைக் கதவு**

பகைவனின் இந்த வெற்றி, நிற வேற்றுமை என்னும் கோட்டைக் கதவுகளைத் தானே திறக்கும்படி அமெரிக்காவை நிர்ப்பந்தித்தது.

"சிறந்த மூளை எங்கிருந்தாலும்... எந்த நிறத்தில் இருந்தாலும்... அதை அங்கீகரியுங்கள்"

என்னும் அறிவுரை மேலிடங்களில் பரபரக்கத் தொடங்கியது.

இந்த அரசியல் நெருக்கடியே, 1958ஆம் ஆண்டு NACA-வை நாசா (NASA) என மறுவடிவமைத்தது என்பர் வரலாற்று ஆய்வாளர்கள்.. அமெரிக்க அரசு பெரும் நிதியை ஒதுக்கியது ஆய்வுக்கு . ஒவ்வொரு ஏவுதலும், ஒவ்வொரு சுற்றுப்பாதைக் கணக்கும், இனி வெறும் விஞ்ஞானப் பரிசோதனை அல்ல - அது சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு போர்முனை என்று பார்க்கப்பட்டது.

இந்த வேகமும், வேட்டையும், திறமைத் தேடலும், நிறம் கடந்து அறிவின் அங்கீகார அழுத்தமும் அதுவரை முக்கியத்துவம் இல்லாமல் முடக்கப்பட்ட கேத்தரின் ஜான்சனை முன்னிலைக்குக் கொண்டு வந்தன.

நிறத்தால் ஒதுக்கப்பட்டவள்,
தேவையால் மதிக்கப்பட்டாள். அவள்
உயர்ந்தது அவள் திறமையால்
மட்டுமல்ல; பகைவனைப் பற்றிய பயம்
அமெரிக்காவின் கண்களைத்
திறந்ததாலும்தான். இது வரலாற்று
விசித்திரம் !

நியாயத்தைத் தானாக உணர மறுத்த ஒரு
தேசத்திற்கு

அதை உணர்த்த

ஒரு பகைவனின் இராக்கெட்
வேண்டியிருந்தது..

**"அந்தப் பெண்ணை அழையுங்கள்"...**

சோவியத்தின் விண்கல செந்நிழல்
அமெரிக்காவின் மேல் நீண்டு கொண்டே
இருந்தது. ரஷ்ய வான்வெளி வீரர்
ககாரின் ஏற்கனவே பூமியைச் சுற்றி வந்து
விட்டார் என்னும் வலி
அமெரிக்காவிற்கு அபாய மணி
அடித்தது.

"நாம் ஒருபோதும், இரண்டாம்
இடத்தில் இருக்க முடியாது..."

1961ஆம் ஆண்டு மே மாதம், அலன்
ஷெப்பர்ட் அமெரிக்காவின் முதல்
விண்வெளி வீரராக 'ஃப்ரீடம் 7'
விண்கலத்தில் விண்ணில் பறந்தார்.
அந்தப் பயணத்தின் ஏவுதள பாதை
மற்றும் சுற்றுப்பாதைக் கணக்குகளை,
மணிக்கணக்கில் கைமுறையாகச்
செய்தவள் கேத்தரின் ஜான்சன். அவளது
கணக்குகள் ஒரு எழுத்தும் பிசகாமல்
துல்லியமாக இருந்தன.

1962... அவளது புகழ் வெள்ளக்கதவு
விரியத் திறக்கும் வேளை வந்தது. ஜான்
கிளென் என்னும் விண்வெளி வீரர்,
பூமியைச் சுற்றி வரும் முதல்
அமெரிக்கராக பறக்கவிருந்தார். அந்தக்
காலத்தில் நாசா ஏற்கனவே IBM
கணினிகளை பயன்படுத்தத்
தொடங்கியிருந்தது - ஆனால் அந்தப்
புதிய இயந்திரங்களை விண்வெளி
வீரர்களே முழுமையாக நம்பவில்லை.

ஜான் கிளென் நேரடியாகக் கோரிக்கை
வைத்தார்:

'அந்தப் பெண்ணை அழையுங்கள்,
அவளிடம் எண்களைச் சரிபார்க்கச்
சொல்லுங்கள். அவள் சரி என்று
சொன்னால் மட்டுமே நான் பறப்பேன்"

"அந்தப் பெண்" என்று அந்த வீரர்
குறிப்பிட்டது வேறு யாருமல்ல
கேத்தரின் ஜான்சனையே.

ஒரு தேசத்தின் பெருமையையும், ஒரு
மனிதனின் உயிரையும் தன் சுட்டுவிரல்
நுனியில் சுமந்தவள் கேத்தரின் ஜான்சன்.
அவள் IBM கணினியின் கணக்குகளை
கைமுறையாக மீண்டும் கணக்கிட்டு,
ஒவ்வொரு எண்ணையும் சரிபார்த்தாள்.
அவள் 'சரி' என்று சொன்ன பிறகே ஜான்
கிளென் விண்ணில் பறந்தார். பூமியைச்
சுற்றி விட்டுப் பாதுகாப்பாகத்
திரும்பினார். இயந்திரத்தை விட மனிதத்
திறமையை நம்பிய அந்தத் தருணம்,
கேத்தரின் ஜான்சனின் பெயரை
நாசாவின் வரலாற்றில் கல்வெட்டாய்
பொறித்தது.

வானம் அவளது எண் கணக்கை ஏற்றுக்

கொண்டது; பூமியோ அவளது தோல் நிறத்தை மறுத்தது.

ஒரு கறுப்பினப் பெண்ணின் கணக்கை நம்பி

ஒரு வெள்ளையின வீரன் தன் உயிரை

விண்வெளியில் பணயம் வைத்தான்.

நிற வேற்றுமை நொறுங்கிய நாள் அது.

**நிலவில் பதிந்த முதல் முத்திரை கறுப்பு...**

1969ஆம் ஆண்டு... மனிதன் நிலவை அடையும் கனவு உண்மையான நேரம்.

அப்பல்லோ 11 நிலவில் மனிதனை இறக்கிய போது, அந்தப் பாதையின் கணக்கீடுகளுக்குப் பின்னணியில் இருந்த மூளைகளில் ஒன்று கேத்தரின் ஜான்சனுடையது. கட்டளை சேவை விண்கலமும் நிலவு தரையிறங்கு விண்கலமும் சரியான தருணத்தில் இணைவதற்கான கணக்கீடுகளை அவள் உருவாக்கினாள்.

நிலவில் முதலில் இறங்கிய நீல் ஆர்ம்ஸ்ட்ராங் சொன்னார்,

"இது ஒரு மனிதனின் சிறிய அடி. ஆனால் மனித குலத்தின் மாபெரும் பாய்ச்சல்"

இந்தப் பாய்ச்சலின் சூத்திரம் வகுத்தவள் ஒரு கறுப்பினப் பெண்.

1970இல் அப்பல்லோ 13 விண்கலம் விபத்தில் சிக்கிய போதும், விண்வெளி வீரர்களைப் பாதுகாப்பாகத் திருப்பிக் கொண்டுவர, மீண்டும் கேத்தரீனின் கணக்கீடுகள் பயன்பட்டன. அவளது கணக்குகள் தப்பி இருந்தால் விண்வெளி வீரர்கள் என்றென்றும் விண்வெளியிலேயே தொலைந்திருப்பார்கள்.

'அப்பல்லோ பணியின் வெற்றியில்தான் நான் மிகவும் பெருமைப்பட்டேன்'

என்று அவளே சொன்னாள். தங்கத் தேரைச் சின்னமாகக் கொண்ட கிரேக்க ஒளிக் கடவுள் அப்பல்லோ அவளை புகழ் தேரில் ஏற்றி ஒளி வீசச் செய்தான் .

மனிதன் முதன்முதலில் நிலவில் காலடி வைத்த வெற்றிச் சரிதத்தில் , ஒரு கருப்பின பெண்ணின் கையெழுத்து , அந்தப் பாதையின் ஒவ்வொரு எண்ணிலும் முத்திரை பதித்திருந்தது..

**விழுப்புண் மொழிகள்...**

கேத்தரின் ஜான்சனின் வார்த்தைகள் வெறும் வாய்மொழி அல்ல; அவை ஒரு பெண் போராளியின் விழுப்புண் மொழிகள் .

"ஆண்கள் செய்யக்கூடிய அனைத்தையும் செய்யும் திறன் கொண்டவர்கள் பெண்கள். சில நேரங்களில் அவர்களுக்கு ஆண்களைவிட அதிக கற்பனைத் திறன் இருக்கும்.

"உதவிய அனைவருக்கும் பெருமை கொடுங்கள், நான் தனியாக எதுவும் செய்யவில்லை."

"நீங்கள் செய்வதை விரும்பிச் செய்யுங்கள்,
அப்போது நீங்கள் உங்கள் சிறந்ததைச் செய்வீர்கள்."

"முதல் அடியை எடுத்து வைத்தவுடன், எதுவும் சாத்தியமானதுதான்."

"நாங்கள் விண்வெளிக் காலத்தின் முன்னோடிகள்."

"நீ எப்போது கற்றுக் கொள்வதை நிறுத்துகிறாயோ,

அப்போதே ஆர்வத்தை இழந்து விடுவாய்.

- கேத்தரின் ஜான்சன்

**ஒரு நெருப்பு அங்கீகரிக்கப்பட்டது - ஒளியாக**

1986ஆம் ஆண்டு, 33 ஆண்டுகால சேவைக்குப் பின் நாசாவிலிருந்து ஓய்வு பெற்றாள் கேத்தரின் ஜான்சன்.

அவளது பணிக்காலம், ஆய்வுகளின் ஐப்பசி... அடை மழைக்காலம். அறுநூறுக்கு மேற்பட்ட உள்ளக அறிக்கைகளும், ஆய்வுக் கட்டுரைகளும் அவள் பெயரில்... அவளுடைய கணக்கீட்டின் அடிப்படையில் பெரு மழையாய்க் கொட்டின.

ஆயினும் பல ஆண்டுகள் அவள் பெயர் பொது மக்களுக்குத் தெரியாமல் திரை மறைவிலேயே இருந்தது. வரலாற்றுப் புத்தகங்கள் விண்வெளி வீரர்களைப் போற்றின; ஆண் விஞ்ஞானிகளை வான் உயரப் புகழ்ந்தன. ஆனால் திரைக்குப் பின்னால் நின்று எண்களைக் கணக்கிட்ட இந்தப் பெண்களைப் பற்றி எவரும் பேசவில்லை.

இப்பெண்கள், காட்டில் பூத்த கறுப்பு மலர்கள்... வாசம் பரவும், உலகம் அறியும்... வண்ணம் மறைக்கும், உருவம் தெரியாது.

அவர்கள் மீதும் வெளிச்சம் பாயும் வேளை வந்தது. 2015ஆம் ஆண்டு, ஜனாதிபதி பராக் ஒபாமா, அவளுக்கு அமெரிக்காவின் மிக உயரிய பொதுமக்கள் விருதான 'பிரசிடென்ஷியல் மெடல் ஆஃப் ஃப்ரீடம்' வழங்கினார். தொண்ணூற்று ஏழு வயதான அந்த முதிய பெண்மணி, ஒரு காலத்தில் "எண்ணூறு மீட்டர் தண்டனை நடை" தலை குனிந்து நடந்தவள், இப்போது நாட்டின் தலைமகனே அவளுக்கு முன் தலை வணங்கும் தருணத்தைக் கண்டாள்.

2016இல், மார்கட் லீ ஷெட்டர்லி எழுதிய (Hidden Figures) "மறைக்கப்பட்ட முகங்கள்" என்ற நூலும், அதை அடிப்படையாகக் கொண்ட திரைப்படமும் வெளியாகி, கேத்தரின் ஜான்சன் மற்றும் அவளது சக ஊழியர்களான டோரோதி வான், மேரி ஜாக்சன் ஆகியோரின் கதையை உலகம் முழுவதும் கொண்டு சேர்த்தது.

அதே ஆண்டு, நாசா, லாங்லி ஆய்வு மையத்தில் அவளது பெயரில் "கேத்ரின் ஜி. ஜான்சன் கணிதப் புலமை மையம்" என்னும் கட்டிடத்தைத் திறந்து கௌரவித்தது.

2019இல் அமெரிக்க காங்கிரசு அவளுக்கு 'காங்கிரசல் கோல்ட் மெடல்' வழங்கியது.

2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்... அவளது 102வது வயதில்... அவளது

உயிர் விண்கலம்... உடல் என்னும் தாய்க் கலத்திலிருந்து பிரிந்தது... ஆனால் அவள் கணக்கிட்ட எண்களின் ஒளிவட்டப் பாதையிலேயே இன்றும் விண்ணில் பயணிக்கிறது.

இன்று நாசாவின் தாழ்வாரங்களில் கறுப்பின விஞ்ஞானிகள் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். கழிப்பறைக் கதவுகள் பிரிவினை பலகைகள் இன்றி விரிய திறந்து கிடக்கின்றன. எந்த மாற்றமும் தானாக வரவில்லை. அது ஒரு கேத்தரின் ஜான்சன் நடந்த எண்ணூறு மீட்டர் தூரத்தின் விலையில் வாங்கப்பட்டது.

எண்ணூறு மீட்டர் வெறும் தூரமில்லை;

ஓராயிரம் ஆண்டு இனவெறியின் நடைபாவாடை. எண்களால் அதைக் கிழித்தெறிந்தாள் கேத்தரின்.

திறமைக்கு என்றும் நிறமில்லை;

துணிவிற்கு எப்போதும் பாலினமில்லை.

—

ஐயா. இலரா மோகன்,
மன்னார்குடி.



## வாரண புராணம்

மலையின் வளைவான ஏற்றச்
சாலைகளில்
விரையும் உங்களின் இருசக்கர வாகனம்
மூச்சுத் திணறுகிறது
என்பதில் நடுங்கும் நீங்கள்
அறிவதேயில்லை
காடெங்கும்
சுவாசிக்கத் திணறும்
யானைகளின் இருப்பை.

### வனப் பாதையில்

வழிகாட்டும் மனிதனுக்குள்
எப்போதும் ஒலிக்கிறது
அடர் காட்டின் கூக்குரலோடு
அவலமான பிளிறலும்.

### உருவத்தில் பெரியதென

உடன் வருவதில் பயப்படுவதில்லை
யானையைத் தொடரும் பட்டாம்பூச்சி

### சொகுசுத் தளங்களை எழுப்பி

மரவீடுகளை உச்சியில் கட்டி
வனங்களைக் கல்லறையாக்கிவிட்டு
இரவெல்லாம் விழித்திருக்கிறீர்கள்
யானையின் வருகைக்கு.

### யானையின் இருப்பிடத்தின் மீது

எழும்பிக் கிடக்கும்
ஆறு வழிச்சாலையில் தான்
அழைத்து வருகிறீர்கள்
ஊருக்குள் புகுந்து

ஒளிந்துகொண்டிருக்கும்
காட்டுயானையைப் பிடிக்க
கும்கிகளை.

## வனச்சுற்றுலாவில்

உடன்வரும்
வழிகாட்டியைக் கேட்கையில்
வாய்க்கலாம்
காணாது திரும்பும் தருணத்திலும்
கண்டுணர்ந்த
யானையின் பவனிகள்
அனுபவத்தின் வழியே.

## அடர் வனத்தில் ஊர்ந்திடும் வாகனத்தின் சொகுசுக்குள் ஒளிந்தபடி யானையைத் தேடுகிறீர்கள்

புகையின் இருள் பள்ளத்தில்
மறைந்தபடி
போக்கிடத்தைத் தேடும்
அதன் இன்னலை அறியாமல்.

## நடந்திடும் பொழுதெல்லாம்

இழுத்திடும் சங்கிலியில்
இழந்துவிட்டதைத்
தேடுவதேயில்லை
காட்டினை மறந்துவிட்ட
கோவில் யானை.

## இழுபடும் சங்கிலியில்

கால்களை அசைக்கத் துடிக்கும்
யானையின் விழிகளுக்குத்தான்
காடெது கோவிலெதுவென
கண்டறிய முடிவதில்லை.

## உங்களைக் காண

ஊருக்குள் வருகை தரும்
யானைகளுக்கு மட்டும்
காட்சி தராத நீங்கள்
ஒற்றை யானையாவது
காட்சி தர வேண்டுமென
வனத்தில் அலைகிறீர்கள்
வனச் சுற்றுலாவில்.

--

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



ஏதோ ஒரு காலத்தில்
நெருக்கமாய் இருந்தவரை

நெடுநாட்களுக்குப் பிறகு
சந்தித்துத் திரும்புகையில்

வறண்ட மன ஆற்றின்
வெடிப்புகளின் ஊடாக
ஒற்றை நினைவுத் துளியும்
கசிந்திடாவிடில்

அதற்குப் பெயர் நெருக்கமா?

**- மதுரகவி,**
வண்டியூர், மதுரை.

# ஆசை!!

அழகிய தோழி உன்னை நினைந்து,
ஆசை எனும் ஆற்றல் என் உள்ளம்
பிளந்தது.
காதல் நதியில் கரைந்து,
காலம் கடந்து கண்ணில் நீரே வந்தது.

மலரின் மணம் போலே,
மனதில் மயக்கம் தரும்,
மெல்ல நெஞ்சில் நின்றதே,
மீண்டும் மீண்டும் நினைவில் உருகும்.

மாதவியின் மடியில் மயக்கம்,
மிடுக்கில் மிதக்கும் மனம்,
பொன்னின் கண்ணில் பளபள,
பரிசில் நீர் போலே என் ஆசை.

- த. வசந்த குமரன்,
5/316, இரண்டாம் குறுக்குத் தெரு,
பொனியம்மன் கோயில் தெரு,
மேடவாக்கம், சென்னை - 600100



# அடிக்கவில்லை

அதட்டவுமில்லை
அள்ளிக்கொண்டு போகிறார்கள்
அழுதபடியே போகின்றன
லாரிகளில் ஆற்று மணல்...

## இறங்க சொன்னார்கள் இறங்கினோம்

அள்ள சொன்னார்கள்
அள்ளி குவித்தோம்
தலைமுழுகியும் குளித்தோம்
நிறைய உள்ளுக்கும் குடித்தோம்
மூச்சு முட்டியது
மேலிருந்து தொங்கும்
கயிர் பிடித்து ஆட்டினோம்
தூக்கினார்கள்
தூக்கு கயிற்றில் தொங்கும்
பிணங்களாய் வெளியேறினோம்

இப்பொழுது எதுவும்
இல்லை
எங்கள் உடல்களை தவிர
ஆகாயம் பார்க்கிறோம்
நிலவுக்கு சூரியனுக்குமாய்
இடைவிடாமல்
பறக்கின்றன
ராக்கெட்டுகள் நூறு...



## மழையை பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்

எங்கே மழை
அங்கே
இங்கே
களை பறிக்கும் பெண்டிர்
கைகளிலிருந்தும் கேட்கிறது
இடியின் சத்தம்
படரும் மத்தியான வெயிலில்
எங்கேனும் போய் ஒளிந்து

கொள்வார்கள்
பெய்த படியே வியர்வை மழை
நனைந்த படியே நிலங்கள்
ஒருவரின் நிலத்திலிருந்து
இன்னொருவர் நிலத்திற்கு தஞ்சம்
நகருகிறது நத்தைகள்...

## என்ன இருக்கிறது உங்கள் சேரிகளில்

எல்லாம் இருக்கிறது
பள்ளிக்கூடம்
கல்லூரி
மருத்துவமனை
அங்காடி கடை
கோவில் என இன்னும்
சொல்லிக்கொண்டே
போகலாம்
தலைவருக்கான அதிகாரத்தின்
நாற்காலிகளை தவிர
காலம் தூரமில்லை
எங்கள் கைகளிலும் முளைத்திருக்கிறது
ஒரு விரல்
நீல மை தடவ...

## இப்பொழுது நீயும் இல்லை

உன் நிழலும் இங்கு இல்லை
ஏகாந்தமாய் பற்றி எரியும்
என் மனகோப்பைக்குள்
சிறு துளி நெருப்பாய்
உன் நினைவின் தூண்டல்
வா சேர்ந்தே பருகுவோம்
கடைசி சந்திப்புக்கான
ஒரு குவளை கண்ணீர் கோப்பையை...

## இரவு வந்துவிடுகிறேன் என்றார்கள்

ஒரு இரவு முடிந்து
மறுநாள் இரவும் தொடங்கியாயிற்று
தொடைகள் நடுங்குகின்றன
நடு சாமத்தில் நாய்கள் அழும் சத்தம்
நான் அழும் சத்தத்திற்கு ஈடாக
ஈரக்குளைகள் இருக்கமாகி விட்டன
லேசாய் திறந்தேன் கதவை
என்னையே தான்
பாரத்துக்கொண்டிருக்கின்றன
இரவும் நிலவும்..

## ஏதோ ஒன்றை

எழுத நினைத்து
உன் பெயரையே மீண்டும்
மீண்டுமாய் எழுதி விடுகிறேன்
அழிக்க முடியும் மறக்க முடியுமோ
எங்கிருந்தோ வந்து
என் கைகளினால் மாலையாகிறது
உன் தோட்டத்து ரோஜா
முள் உண்டு
மனம் வருமோ தூக்கியெறிய...

## நீண்ட நேரமாய்

ஒலித்துக் கொண்டிருக்கிறது
எங்கள் சேரி
மாதா கோவில் மணி ஓசை
நேரம் எட்டு
துடித்து எழுந்து
பள்ளிக்கூட புத்தகங்களை
எடுத்து பையில் அடுக்கி வைக்க
ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து
கீழே விழுகிறது
நண்பர்கள் வரைந்து கொடுத்த
சிலுவையின் வரைபடம்
மீண்டும் எடுத்து பையில்
தினித்துக்கொண்டு நடக்கிறேன்
புத்தகங்களை விட

கணமாய் இருக்கிறது சிலுவை
வெள்ளை நிற
வானத்திலிருந்து
பார்த்துக் கொண்டிருக்கிறார் ஏசு...

-- ச. சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி.

# மறைந்த மனம்

தேடலில் கண்டேனில்லை
தெரிந்த இடமேயில்லை
அதுபோடும் ஆட்டம்
அறிந்தவரும் இல்லை.

ஐம்புலன் அடக்க மறுக்குது
ஆங்கோர் எல்லையில் துடிக்குது
நிமிடத்தில் சூழலை மாற்றுது
நினைத்ததைச் செய்து முடிக்குது.

சிந்தையில் ஏக்கம்
சிதையேன் என்குது
நானே உயர்ந்தவனென்று
நாளும் களிக்குது.

சூதும் வாதுமின்றி
சுற்ற மறுக்குது
அச்சம், அகங்காரம்
அடக்காது திரியுது.

பணம்,புகழ் பெருமையின்
பின்னால் சுழலுது
பார்ப்போரை ஒப்பிட்டே
பலவும் தொலைக்குது.

செல்லும் இடத்தில் சிலபல
செவ்வனே ஏற்குது
ஒவ்வொரு நாளும்
ஓயாமல் மாறுது.

கடல்போன்று தினம்
வளரத் துடிக்குது
உயரத்தில் நானென்று
உபாயம் சொல்லுது.

எங்கும் அடங்காது
ஏய்ப்பேன் என்குது
நுனி இடைவெளியில்
நூறாயிரம் எண்ணுது.

கட்டுக்குள் அடங்காது
காட்டாறாய் ஓடுது
கண்ணிமைக்கும் நேரத்தில்
கட்டவிழ்ந்து போகுது.

தனித்திருக்க ,விழித்திருக்க
தனலாய் தவிக்குது
தன்னை மறந்தே
தானாய் தொலையுது.

யார் படைத்தது
மனமே உன்னை
யாரென்று அறிந்திடாது
யாக்கை கறையுது.

—

விண்மீன்,
*9087474583*

# இரவின் வன்கொடுமை

பரிபூரண காதலின்
வரங்களை வழங்கிய
உன் திருக்கரங்களால்
என் பாழடைந்த வாழ்வின்
திறவுகோலையும் வழங்காதே
எதிர்காலத்தின் இருளில்
நான் இற்று இற்றுச் சாவதில்
உனக்கு அவ்வளவு விருப்பமா?

## நாயென ச்சீ ஓடு

என விரட்டினாலும்
காதலின் நன்றியோடு
உன்பின்னால்
யாசகனாய்
அடிமையாய்ப்
பைத்தியமாய்
தொடர்வேன் நான்.

## காதல் இல்லை என்று

தூள் தூளாய் உடைக்கிறாய் நெஞ்சை
சிதறிய ஒவ்வொரு சில்லிலும்
நீயேதான் இருந்து
மீண்டும் மோகிக்கிறாய்
சிறகுகள் முறிந்த பறவையாய்
நான் துடிதுடித்து
உயிர்க் கசிகிறேன்

## நீயென்னைப் பொய்யாய்

நிராகரித்துக்கொண்டே இரு
நானுன்னை உண்மையாய்
நேசித்துக்கொண்டே இருக்கிறேன்
மலைமீது தீபமாய்
நம் காதல்
சுடர்வீசி எரியட்டும்.

## நான் உன்னை

அடைய விரும்பவில்லை
அருகில் வைத்துக்கொள்ளவே
விழைகிறேன்
உயிர்க்காற்றாக
இதயத் துடிப்பாக
என் எதிர்காலமாக.

## உன் முதல் முத்தத்தை

இதழ் வழியாக
உயிருக்குள் நுழைத்துவிட்டாய்
நான் வாழும் வரை என்னொடு
இறந்த பின்னால்
ஏழ்பிறவி உயிரோடு
கடந்திருக்கும்
கலந்திருக்கும் சத்தியம்.

## என் கைகளில்

உன் கைக்கோர்த்தேன்
உன்னை மார்போடு
இறுக்கி அணைத்ததின்
இனிய வெப்பம்
உயிருக்குள் பெருங்கடலை
நிரப்பியது.

## இதயம் ஏரிந்து

விழிகள் சாம்பலாகும்
நெடிய துயருடன்
அவ்வழியில் காத்திருந்தேன்
இனியென்றும் வாய்க்காது
உன் பேரழகின் உற்சவம்

என் உயிர்க்கிளையின்
கடைசி இலையும்
சருகாய் உதிர்ந்தது
துளிரை விரும்பாத நான்
கோடையின் பேரிடியை யாசிக்கிறேன்
என் வேர்களை மொய்க்கிறது
நீயற்ற சாபம்

## என் உயிரின்

ஒவ்வொரு அணுவிலும்
உன் பேரன்பால் கரைந்துவிட்டாய்
உன்னை விட்டு
விலக வேண்டுமெனில்
ஒவ்வொரு அணுவையும்
வன்மத்தோடு பிளந்து
உன்னைப் பிரித்தெடுக்க
பெரும்பாடு படவேண்டும்.

## பறந்த உலகத்தின்

எல்லாத் திசைகளிலும்
உன் காதலைச் சுமந்து
இருமாப்புடன் சுற்றுவேன்
மழை
வெயில்
புயல்
பனி
பேரிடர் எதுவாகிலும்
காக்கும் கவசம்
நீ.

## என் அழுகை

உனக்கானது என்பதால்
என் விழிகள்
தீர்த்தக் குளமாகிறது

## நீ என்னுடன் இருக்கிறாய்

என்பதே பாக்கியம்
என்னைக் காதலிக்கிறாய் என்பது
கடவுளின் நேரடி
அருட்கொடை அல்லாமல்
வேறென்ன?

## என்மேல் பைத்தியமாய்க் காதலித்தது முதலில் நீ

நான் நிஜ பைத்தியமாகிவிட்டேன்
நீ தள்ளியிருந்து
வேடிக்கைப் பார்த்துச் சிரிக்கிறாய்
கல் எறியாமல் இருந்தமைக்கு
மனமார்ந்த நன்றி.

## ஒன்பது மணிக்கு

வருகிறேன் என்றாய்
இரவு பத்து
பதினொன்று
பனிரண்டு
என் காதல் பாவம்
இதய வலியுடன்
வன்கொடுமை
நிகழ்த்துகிறது இரவை.

## கருணையற்ற நீ

எனை வேண்டாம் என்று
வெறுத்துக் கொண்டிருந்தாய்
என் ஊரின் சனிமூலை இடுகாட்டில்
எனக்கான குழியைத்
தோண்ட துவிங்கிவிட்டார்கள்
என்மீது கருணையுள்ள
நல்லவர் நால்வர்

## இன்னும் வரவில்லை

உன் தாமத மிகுதியின் இறுதியில்
பகலைத் தின்றுக் கொழுத்த இரவை
ராட்சசனாய் வதைக்கப்போகிறேன்
நிலாவில் இல்லாமல்
இருக்க வேண்டும் நீ!

## ஒரு கவிதையில்தான்

நானுன்னை ஆட்கொண்டேன்
இன்று ஓராயிரம் புனைகின்றேன்
அத்தனையும் உதிரிப்பூக்களாய்ச்
சுடுகாட்டுப் பாதையில்
நசுங்கி அழிகின்றன
நீ எனை விலகும் முயற்சியின்
தீவிர யோசனையில்
யாரிடம் உதவி வேண்டுவாய்?

## எத்தனை இரவுகள்

என்னுடன் கூடி இருந்தாய்
ஒரு இரவு கூடவா
நம் காதலின் கதறலை
உன் காதில்
சேர்க்கவில்லை இன்று.

## பூரணத்துவம் என்பது

பாதியில் விலகிக் கொள்வதா ?
பயணம் முழுதும் பேரன்பினால்
இரண்டறக் கலந்திருத்தல் தானே!

## சாவின் இறுதி நாழிகையில்

இயேசுவைக் கைவிட்ட
பிதாவைப்போல
நீயும் என்னைக் கைநழுவ விடாதே
மீண்டும் ஒருமுறை
உயிர்த்தெழும் வாய்ப்பற்றவன் நான்.

- பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்,
கைப்பேசி: 8940181811



## காதல்

காலை முதல்
ஒவ்வொரு இடங்களில்
எண்ணும் போதும்
ஆங்காங்கே
ஒன்றோ, இரண்டோ
என்ற முறையில் தான்
புறாக்கள் கிடைத்தது
மாலை
ஐந்து மணிக்கு
தண்ணீர் தொட்டிக்கு
மேலே பாருங்கள்
மொத்தமாக
அந்த
இருபது புறாக்களையும்
ஒன்று சேர பார்க்கலாம்
அதை தான்

நானும் சொல்கிறேன்
அழகு இல்லை
அறிவு இல்லை
அது இல்லை
இது இல்லை
என்று என்னை பாராதே
மொத்தமாக என்
காதலை பார் என்று...

- இரா. மதிராஜ்,
3/79, அலப்பட்சக் கவுண்டன் புதூர்,
காடையூர் அஞ்சல், காங்கேயம் - 638701
திருப்பூர் மாவட்டம்,
அலைப்பேசி: 9788475722

# கனவின்றி காலம் போகுமா

கனவின்றி காலம் போகுமா கண்ணில்...

வினையின்றி வாழும் மானுடமா
நெஞ்சமதில்....

நம்பிக்கையின்றி வாழ்வில்
வெற்றிடங்கள்
இன்றில்....

பயனின்றி பாரும் நாடுமோ
பயணமதில்....

அலையின்றி கடலோரம் ஆசுவாசம்
தோன்றில்....

நிலையின்றி
போகாதோ விருட்சங்களுமே
நிழலால்...

விழியின்றி தூக்கம் பகலான கானலால்...

வழியின்றி வறட்சியாய் அருவியாய்
நெஞ்சினில் ....

பயணங்களின்றி
பார்க்குமோ வில்லின்
வியர்வையால்...

துளிகளின்றி மழையும் துயரங்களின்
தவிப்புகளில்...

மயக்கங்களின்றி வழிபாதை
கரைசேர்க்குமோ
இயற்கையில்...

நதியின்றி நாணலின் காற்றின்
தவிப்பில்...

உறவின்றி ஓடுமோ
மேடுபள்ளமும் வாழ்வில்...

நனவின்றி நாளெல்லாம்
வெற்றிக்கொடி
கட்டமுடியுமோ?....

- கவிமணி,
இரஜிகை நிலவன்,
மும்பை,
கைப்பேசி: 9920454827



# குற்றமேதும் இல்லை கண்மணி

குற்றம் குற்றமாக குவிந்த
என்னன்பால் சிக்குண்ட குற்றம்
நான்தான் நான்மட்டும்தான்.

என்னிடம்தான் பேசினார்கள்
என்னிடம்தான் பழகினார்கள்
எல்லாமும் என்னிடம்தான்
அப்படிதான் நானும் நம்பியிருந்தேன்.

இமைக்கும் நேரத்தில்
தோஓஓஓ... எவ்வளவு தூரம்
நீங்களும் பாருங்களேன்
எனக்காக நீங்களும்
ஒரே ஒருமுறை பேசுங்களேன்
என்னால் நகர முடியவில்லை
என்னை சுற்றியும் அகழி வெட்டியது
யார்?
ஓர் இரைச்சல் கூட எனக்கு
கேட்கவில்லை
ஓர் இம்மியளவுகூட என்னால் உணர
முடியவில்லையே
எவ்வளவு எவ்வளவு நுட்பமான
வேலைப்பாடு
அவர்கள் பயன்படுத்திய ஆயுதம் எது?

இவர்கள் பயன்படுத்திய பேராயுதம்
அன்பாக இருக்குமோ?

## இதையிதை பேசுங்கள்

இதையிதை பேசாதீர்கள்
இரண்டு நெடும் பட்டியல்
அவர்கள்தான் தந்தார்கள்
அதிகமில்லை, அடுத்தக்கணமே
அதை வாங்கியும் கொண்டார்கள்
எதையோ சேர்க்கவும் நீக்கவும்
வேண்டும்போல.

- துங்கன்

---

# இனியே(ய)தும் வேண்டாம்

மெல்லிய இறகுகளின் மெத்தை
உன் வார்த்தை
மோதும் பூங்கொத்தின் ஸ்பரிசம் உன்
முத்தம்
மண்வாசம் கிளம்பும் மென்தூறல் உன்
அணைப்பு
அறிந்துணரா புத்துணர்வில் உன்
நேசத்தின் கதகதப்பு

இனியேதும் வேண்டாம் பராபரமே
காதலே கடையடைக்கலம்,
காதலோடுறிக்காடடைவேன்!!

## குஞ்சுப்பறவை

எப்போதும் நான்
விழுந்து விழுந்து
பறக்கப்பழகுகின்ற
குஞ்சுப்பறவை -
நேசித்தலில்

## ஒளித்தோட்டம்

வேறு எவருடைய
கண்களுமல்ல,



இரவெல்லாம் எனை
உற்று உற்று நோக்குவது
உன் நட்சத்திரக் கண்கள்தான்..

இமைக்காமல்
பருகுமென் பேரண்ட
ஒளித்தோட்டம்
நீ - கண்மணி!

## விடுதலை

என் கரங்கள் திறந்தேதான்
பிறந்திருக்கின்றன,
ஆயினும்
அவர்களால் தான்
எல்லாமே
என்று நினைத்துக்
கொண்டிருப்பவர்களுக்கு
அவர்களால் எதுவும் இல்லையென
அறிந்து கொள்ளும் பொருட்டு
மீச்சிறுகாலம்
விடுதலை தந்தேன்..

நிழலென..

நீ அன்பு செய்தபோதும்
உன் அருகில் இருந்தேன்;
நீ வன்முறை செய்தபோதும்
உன் நிழலாகவே நின்றேன்.
நீ இருந்த இடமெல்லாம்
நானும் இருந்தேன்;
நீ விட்டுச் சென்றபோதும்
அதே இடத்தில் -
உனக்காகக் காத்திருந்தேன்.


இன்பம் வந்தபோது
உன்னோடு இணைந்தேன்;
துன்பம் சூழ்ந்தபோதும்
தோகை விரித்துத்
தழுவிக்கொண்டேன்.
நீ என்னை விரும்பினாலும்,
வெறுத்து விலகினாலும்-
உன் பாதச்சுவட்டின் பின்னால்
நிழலெனத் தொடர்ந்திருப்பேன்.

நீ சிரித்தபோதும்
உன் அருகில்;

நீ அழுதபோதும்
உன் அருகில்;
நீ என்னை மறந்தபோதும் கூட
உன்னை மறக்காமல்.
இப்போது சொல் -
நான் யார்?

--

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.



ஓவியம்:
மா. நிரல்யா,
மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# மூன்றாய் மனிதனாய்

பிரிவு என்றால்
வருத்தம் தான்

தோல்வி என்றால்
மன வேதனை தான்

இந்த பணி தானே
எளிமையானது

என்று நிகழ்வுகளிலிருந்து
விலகி மூன்றாய் மனிதனாய்
எளிதாய் எல்லோருமே
சொல்லலாம்

ஆனால் அவை
தனக்கு சம்பவிக்கும் போது தான் அதன்
ஆழத்தை
உணர முடியும்

## எது வரை?

படுக்கையில் புரள்தல்
உறக்கம் வரும் வரை

கடை கடையாய்
அலைதல் மனையாளுக்கு
திருப்தி கிடைக்கும் வரை

மருந்துகளோடு சகவாசம்
நோய் உடலை விட்டு
வெளியேறும் வரை

பிறரை புகழ்ந்து கொண்டே இருத்தல்
தனக்கு காரியம் ஆகும் வரை

கடின உழைப்பும்,முயற்சியும்
இலக்கை அடையும் வரை...

## இரண்டில் ஒன்று

உரிய மதிப்பும், மரியாதையும்
கிடைக்க வேண்டும் எனில்

ஒன்று
சக மனிதர்க்கு
அப்படி எண்ணம்
இருக்க வைண்டும்

இல்லேயெனில்
நம்மை மதிக்க வேண்டும்
வேண்டிய நிர்ப்பந்தம்
சக மனிதர்க்கு இருக்க வேண்டும்....

## ஒருமையிலே

வா என்பதும்
செய் என்பதுமான
ஒருமை வார்த்தைகள்
நம்மை சங்கடப்படுத்துவதில்லை

மாறாய் சொல்பவர்கள்
நம் மனது நெருக்கமானவர்களாய்
இல்லாது இருக்கும்
போது மட்டுமே
சிரமப்படுத்துகின்றது...

## அந்த கணத்து

உணர்வுக்கு ஏற்ப...

எண்ணியபடி
செயல் அமைய

'இனி எல்லாம்
வெற்றி தான்'

இழப்பின் வேதனையில்
'இப்படியே போனால்
என்ன செய்ய'

ரசிக்கப்பட்ட
உதட்டு மொழிக்கு
'இது தொடரணும்'

அனுபவித்த
பொழுதுபோக்குக்கு
'எப்பவும் கிடைத்தால்
நன்றாக இருக்கும்'

சரியாய் யூகித்த
பின் நிகழ்வுக்கு
'இப்படி யோசிக்கணும்'

ரசித்து ருசித்த
உணவுக்கு
'இதை மாதிரி காலம்
முழுமைக்கும் கிடைக்கணும்'

என அந்த
கணத்து உணர்வுக்கு ஏற்ப
எண்ணங்களாய்
மனதில்...

## ஒரு முறையேனும்...

நாம் எதிர்பார்த்த
பிறரின்
பேச்சுக்கு
செயலுக்கு
இலக்குக்கு
முடிவுக்கு

அவர்களின்
தகுதியையும்
திறமையையும்
ஆத்மார்த்தையும்
மட்டுமில்லாமால்

தற்போதைய சூழ்நிலை
மனநிலை
நெருக்கடிகள்
சவால்கள்
பிற அவசிய பணிகள்

இவற்றையும்
சேர்த்து
ஒரு முறை
யோசித்தால்
உதவினால்
ஊக்கப்படுத்தினால்

ஏமாற்றங்களும்
கோபமும்
மனக்கசப்பும்
தவிர்க்கப்படும்

## இப்படி நீண்டால்....

செய் பணியில்
ஒன்று முடித்து
அடுத்தது என

தனிமையில்
சலனமற்று
அவசியத்துக்கான
யோசனை என

உறங்குகையில்
இயற்கை உபாதை
நீர் அருந்த
அருகில் சத்தம்
இல்லாமால்

புத்தி ஒய்வு
பெற்று புத்துணர்ச்சி பெற
தனக்கான விருப்பங்களில்
செய்பணி
குடும்ப பணி
என சிந்தனை இல்லாமால்

எண்ணத்தை
உதட்டு மொழியால்
வெளிப்படுத்துகையில்
குழப்பம் இல்லாமால்
கேட்பவர் முகம் வேறு
பார்க்காமால்
கைப்பேசி நொண்டாமால்
தெளிவாய்

தொடர்ந்தால்
மனம் உவகை
கொள்ளும்...

## உண்மை சொல்லிகள்

மனதில் உள்ள கடினத்தை
வாய் இல்லை என்று மறுக்கும் போது
உண்மை சொல்லும் முகம்

மன அழுத்தம் இருப்பதை
உதடு கிடையாது என்று சொல்லும்
போது
உண்மையை அறிவிக்கும்
இதய துடிப்பு

நோயின் வேதனையை
உதட்டால் இல்லை என்று உரைக்கும்
போது
மெய்யை சொல்லும்
பாதிப்படைந்த உடம்பு...

## மதிப்பு

ஒரு முறை சொன்னவுடன்
சரியாய் புரிந்து கொள்ளும்
கற்புர புத்தி

சிக்கலான விஷயங்களில்
நிதான போக்கு

குழுவாய் குறிக்கோளை நோக்கி
நகர்கையில்
பிறரின் கருத்துகளுக்கு
மதிப்பளித்தல்

அனைத்து துறைகளைப்பற்றி
அடிப்படை அறிவு

இவையும்
மதிப்பிற்குறியவை தான்சொத்துக்கள்
மட்டுமல்ல...

அப்ப...

முக்கியத்துவமான
பணியை
கடமை உணர்ச்சியுடன்
உளப்பூர்வமாய்
செய்கிற போது
அதுக்குக்குள்ளே
பணி நேரம்
முடிந்ததா

உறவின்
நட்பின்
சுவராஸ்ய பேச்சில்
இவ்வளவு நேரமா
பேசியிருக்கோம்
நேரம் போனதே
தெரியவில்லை

பயண நேரத்திற்கு
வெகு முன்னதாய் வந்து
விட்டு வாகனம்
இன்னும் வரவில்லை
நேரமே போக மாட்டேங்கிறது

முடிவு இப்போது தான்
என்று தெரிந்த பின்பும்
இடைப்பட்ட காலத்தில்
வேறு எதற்கும்
சிந்தனை செல்ல மறுப்பதால்
காலா காலத்தில்
சொன்னா நல்லா இருக்கும்



என மனித எண்ண ஓட்டங்கள்

நம் விருப்பத்துக்கு
நீளவும்
சுருக்கிக் கொள்வதையும்
நாளின்
இருபத்தி நாலு மணி நேரம்
செய்யப்போவதில்லை
என்ற புத்தியின்
வார்த்தையை
புறந்தள்ளி...

- *A.S. சுந்தரராஜன்*
மானாமதுரை

---

# தெரிந்த ரகசியம்

ஓடும் நதி
வீசும் காற்று,
பாடும் பறவைகள்,
உயர்ந்த மலைகள்,
யார் படைத்தது?
இறைவனா..இயற்கையா?

இறைவனையும்
இயற்கையையும் யார் படைத்தது?
ஏன் படைக்கவேண்டும்?
ஏன்? என்ற கேள்விகள் ஆயிரம்..

பதில் இருக்கிறதா?
இல்லை!
ஏன் இல்லை?

யாருக்குத் தெரியும்?
எல்லாம் தெரிந்தவர்
யாரும் உண்டோ?
யாதும் தெரியாதவர் உண்டோ?

பொய்க்கும் உண்மைக்கும்
கூட்டுச்சராசரி இவ்வுலகு

ஓடும் வரை ஓடு
வாழ்க்கை அதுதான் வாழ்வின்
யாவர்க்கும் தெரிந்த ரகசியம்..!

—

நேசன் மகதி

# வார இறுதி நாள்

நாளெல்லாம்
தலையில்
தூக்கி சுமந்து
வார இறுதி நாளுக்காக
காத்துக் கிடக்கிறாள்
பெண் தொழிலாளி

முகமெல்லாம் கழுவி
வியர்வைத்துளிகள் தோய்ந்த
சேலையில்
முடிந்து வைத்த சம்பளம்

கடனுக்குப் பாதி
வயிற்றுக்கு மீதி எனப்
பிரிகிறது

ஆசையாக
அவள் வாங்கிச் செல்லும்
தின்பண்டத்தை
வேகமாக வாங்கிப் பிரிக்கும்
அவளின் குழந்தை
எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்து
பின் கொஞ்சம்
சுவைத்துச் சொல்கிறாள்
'என் அம்மா வாங்கி வந்தது

ஒரு வார
உடல் வலி
ஒரு நொடியில்
பறந்து போகிறது
தாய்க்கு.



- சா. கா. பாரதி ராஜா,
மனை எண் 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# சிந்தையியல்

யாசகனும் வாசகனும் ஒன்றுதான்;
தன் பசியைத் தீர்த்துக் கொள்வதில்...

சாறு கொடுக்கும் கரும்பு சக்கையாவது
போலவே...
நற்பேறு எடுக்கச் சிலரின் வாழ்வு!

வீசுகின்ற காற்றும்
பேசுகின்ற பேச்சும்
யாருக்கு இங்கே நிரந்தரம்?

சிலந்தி வலையில் சிக்கிய
சிற்றெறும்பாய்;
சிலருக்கு சிலரால் வாழ்வு!

எதுவும் ஆகப் போவதில்லை என்று
தெரிந்தும்;
பிறரின் மீது கோபம் கொள்வதில் என்ன
பயன்?

விருப்பமும் வெறுப்பும் அவரவர்
தனிப்பட்ட விடயம் என்றாலும்;
பொறுப்பு என்பதில் சமூகத்தில்
சரிசமமே!



- வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# புதுக்கவிதைப் பூக்கள்

கூண்டுக்குள்ளிருந்து
தோகை விரித்தாடும்
மயிலுக்கு
எப்படிச் சொல்வேன்?
பூங்காவில் பொழிவது
மழையல்ல
செயற்கை நீரூற்றென்று!

## கிளையில் அசையும்

கருப்பு ஞெகிழிப் பையை
தன்னினமென்று
கரைந்தழைக்கிறது
அப்பாவி காகம்.

## பெருங்கனவைப் பிரித்து

## மேயும்



ஒருநீளரவில்
நிலவின் குளுமையை
ஆதரிக்கும் வண்ணமாய்
நிற்காமல் பெய்கிறது மழை!

## உன்னைப்

பின்தொடரும்
என்னை
நீ பார்க்காத
பார்வையெல்லாம்
சேர்த்து
பார்த்துக்கொண்டிருக்கிறது
உன்
கூந்தல் ரோஜா...!

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்,
பேச: 9443139353

# நினைவெல்லாம் உன் வாசம்

அகத்தில் நிறைந்து
முகத்தால் கவர்ந்தவளே

அன்பின் அலைகளால்
அன்பனை ஈர்த்தவளே

மயக்கம் உன்னிடமே
தயக்கம் என்னிடமே

எனது நினைவெல்லாம்
உன் வாசமே



சுவாசமும் சுகமானது
சுழன்றே கமழ்கிறது

சகியிடம் சரணந்தேன்
சஞ்சலமும் மறைந்ததே

வாழ்வினில் இனிமையது
வசந்தமாகியே இதமானது

இனியவளே இல்லறத்தில்
இனிமை தந்திடுவாயே

- பெ. வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்.

# மரணித்துக் கொண்டிருக்கிறது

நீ
அளித்த
அன்பால்
என் சிறகுகள்
உயர உயர பறந்தன.

நீ
கொடுத்த
நம்பிக்கையால்
வானம் கூட
என் வசமானது.

எதிர்பாராமல்
நீ
வழங்கிய தெல்லாம்
என் வாழ்க்கை
பக்கங்களை
கவிதைகளாக
நிரம்பி
வசந்தமாக்கியது.

உன்
நினைவுகள்
எப்பொழுதும்
காலச் சுவடுகளாக
என்னுள்
புதைந்துக் கிடக்கும்.



இன்று
ஏனோ?
எளிதாக என்னை
துறந்தாய்!
நினைக்கக் கூட
மறந்தாய்!

இப்பொழுதெல்லாம்
ஒரு சிறிய
மரணத்தை சுமந்தவாறு
வலியோடு நகர்கிறேன்.

என்றாவது நீ
திரும்புவாய் என்ற
நம்பிக்கை
கொஞ்சம் கொஞ்சமாக
மரணித்துக் கொண்டிருக்கிறது
என்னோடு சேர்ந்து.

- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம், கைப்பேசி: 6380704001

# அசையும் ஆழியம்மா

பூமிமாதா வயத்துக்குள்ள
பொங்குதடா ஆழியம்மா

ஆழஅகல அளவுமில்ல
அசைஞ்சி ஆடும் ஆழியம்மா

பலகோடி உசிருகள
பக்குவமா சுமக்குமம்மா

கண்ணு விரிய பாக்கையில
கடுகாக்கும் ஆழியம்மா

எரிமலய சொமந்தாலும்

# ஏக்கம் தீர்க்கா ஆழியம்மா

அலையத்தான் எல்லையாக்கி
ஆண்டுவந்த ஆழியம்மா

கால்நனைக்க வந்தாலும்
கட்டியணைக்கும் ஆழியம்மா.

மரக்கலன ஓடவிட்டு
மக்களதான் சேர்க்கும்மா

மனபாரம் கொட்டவந்தா
மகிழ்வாரம் போடுமம்மா

பாய் விரித்த ஆழியம்மா
பாக்கும் கையி குவியுதம்மா

வானத்து நெறத்தாலே
வசியம்செய்யும் ஆழியம்மா

வரமளித்து தெய்வமாக
வாரிவழங்கும் ஆழியம்மா

உலகத்து மழயத்தான்
உசிருக்கு ஊட்டுமம்மா

கோப பட்டு எழுந்தாலே
கொடுங்காட்சி காட்டும்மா

மொத்த பாகம் நீயேதான்
மெத்தமாக வாழவேணும்

சொந்தமாக நீ இருந்தா
பந்தமாக வாழும் பூமி.

- விண்மீன்,
சென்னை, கைப்பேசி: 9941390563

# மாதுளம் பூ

முத்தம்மா பாட்டி
இன்றும் மகா சிவராத்திரியில்
கொதிக்கும் நெய்யில்
கையால் அப்பம் சுட்டு
அடியார்களுக்கு வழங்குகிறாள்

பூசாரி சீறும் காளியை
சிருங்காரியாக சோடிக்கிறார்

அபிராமி அந்தாதியில்
ஆத்தாளை எங்கள்
அபிராம வள்ளியை
என்ற பாடலைப் பாடி
பூசை வைக்கிறார்

வேறெங்கேயும்விட
குலதெய்வ கோவிலில்
உரிமையோடு
உபாசனை செய்யலாம்
அம்பிகையை

அந்தாதி எனும்போது
அந்தமும் ஆதியும்
அவள் என்பது பொழிப்பு.

- மு. ஆறுமுகவிக்னேஷ்
சத்திரப்பட்டி - 626102

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: *thiravukolfdbk@gmail.com*
பகிரி: **+91 8220567322**

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: *thiravukolsubmit@gmail.com*
பகிரி: **+91 8220567322**

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: **+91 8220567322**

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.